DR. D. DON STONY

11o குறிப்பறிதல்

1. இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு

நோய்நோக்கு ஒன்றுஅந்நோய்மருந்து

இவளுடைய மையுண்ணும் கண்களில் இருவகைப் பார்வைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று நோய் செய்யும். மற்றொன்று அந்நோய்க்கு மருந்தாகும்.

2. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்

செம்பாகம் அன்று பெரிது

அவள் என்னைப் பார்த்த பார்வை, காமத்தின் சரி பாதியன்று. அதைவிடப் பெரிய பகுதியாகும்.

3. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதுஅவள்

யாப்பினுள் அட்டிய நீர்

அவள் என்னை நோக்கினாள். யான் கண்டதும் நாணித் தலை குனிந்தாள். அக்குறிப்பு எங்களின் அன்பு பயிருக்கு வார்த்த நீராயிற்று.

4.யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்

தான்நோக்கி மெல்ல நகும்

நான் அவளைப் பார்க்கும்போது அவள் கீழே குனிந்து தரையைப் பார்ப்பாள். நான் பார்க்காதபோது அவள் என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்வாள்.

5. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்

சிறக்கணித்தாள் போல நகும்

என்னை அவள்நேராகப் பார்க்கவில்லை. ஆனால் அவள் ஒரு கண்ணை இறுக்கிக் கொண்டு பார்ப்பது போல் பார்த்து மகிழ்வாள்

6. உறாஅதவர்போல் சொலினும் செறாஅர்சொல்

ஒல்லை உணரப் படும்

புறத்தே அயலார் போல் அன்பில்லாமல் பேசினாலும் அகத்தே பகையில்லாதவர்களின் சொல் என்பது விரைவில் தெரிந்துவிடும்.

7. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்

உறாஅர்போன்று உற்றார் குறிப்பு

கபடமின்றிச் சொல்லும் கடினச் சொல்லும், பகைவர்கள் போல் பார்க்கும் பார்வையும் உள்ளே அன்பு நிறைந்திருப்பதற்கு அறிகுறிகளாகும்.

8. அசையியற்கு உண்டு ஆண்டு ஓர் ஏஎர்யான் நோக்கப்

பசையினள் பைய நகும்.

நான் அவளைப் பார்க்கும்போது அவள் என்னைப் பார்த்து அன்போடு நகைப்பாள், அசையும் இயல்புடைய அவளுக்கு அப்போது ஓர் அழகு உள்ளது.

9. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்

காதலார் கண்ணே உள.

அயலாரைப் பார்த்து போல் காதலர்கள் வெளியில் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வது, உள்ளேயிருக்கும் அவர்களின் அசையாத அன்பிற்கு அறிகுறியாகும்.

10. கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல.

காதலர்களின் கண்கள் ஒன்றையொன்று அன்போடு பார்த்துக் கொண்ட பிறகு அவர்கள் வாயால் பேசிக் கொள்வதால் ஒரு பயனும் இல்லை.